## இராசிபுரம் நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு

2022–ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 11–ஆம் தேதி திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி }
நாள் : .04.2022 }

தலைவர்,
நகர் மன்றம்.

### இராசிபுரம் நகர் மன்றத் தலைவர் அவர்களால் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படும் பொருள்கள்

1) இராசிபுரம் கூட்டுறவு நகர வங்கி (எண். 6649)–யில் 1304 பயனாளிகளுக்கு நகைக் கடன்கள் அசல் ரூ. 4,37,19,860/– மற்றும் வட்டி ரூ. 41,08,668/– மொத்தம் ரூ. 4,78,28,528/– தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

2) எஸ். 318, இராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 353 பயனாளிகளுக்கு நகைக்கடன்கள் அசல் ரூ. 1,60,17,600/ வட்டி ரூ. 12,87,480/– மொத்தம் ரூ. 1,73,06,443/– தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

3) தமிழகத்திலுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள், நகர்ப்புற சுகாதார மையங்கள் தூய்மையாக பராமரிக்க 01.04.2022 முதல் 30.04.2022 வரை ‘‘நமது மருத்துவமனை மகத்தான மருத்துவமனை‘‘ முகாம் நடத்த தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

   மேற்கண்டுள்ளவாறு 1657 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ. 6,51,34,971/– நகைக்கடன் தள்ளுபடி செய்ததற்கும், ‘‘நமது மருத்துவமனை மகத்தான மருத்துவமனை‘‘ முகாம் நடத்த ஆணையிட்டதற்கும் சட்டமன்றத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கைகளின் போது 56 புதிய அறிவிப்புகள், தொலைநோக்க திட்டம், நகர்புறங்களில் சீர்மிகு ஆளுமை திட்டம் வெளியிட்டதற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களுக்கும் தமிழக அரசிற்கும் இராசிபுரம் நகர்மன்றத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.

4) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நகராட்சி நிர்வாகம் மற்றம் குடிநீர் வழங்கல் துறை சார்பில் மானியக்கோரிக்கை எண்.34 2022–2023–ஆம் ஆண்டிற்கான 56 புதிய அறிவிப்புகள், தொலைநோக்குத்திட்டம் மற்றும் நகர்புறங்களில் சீர்மிகு

ஆளுமை திட்டம் ஆகியவை தமிழக சட்டப்பேரவையில் நகராட்சி நிர்வாகம் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் குப்பை அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் மினி டிப்பர் லாரி எண். TN 28 AS 0110 பழுதாகி இயக்க முடியாத நிலையில் உள்ளதால் மேற்படி வாகனத்தின் பழுதுகளை சரிசெய்ய உத்தேச செலவினம் பட்டியல் மேற்படி வாகனத்தின் Authorised Dealer – Krystal Motor's Private Limited, சேலம் நிறுவனத்தில் கீழ்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | Clutch Work | - | 14000/- |
| 2) | Brake work | - | 22000/- |
| 3) | Four wheel grease | - | 4000/- |
| 4) | Brake Booster work | - | 17500/- |
| 5) | Clutch Cylinder work | - | 5000/- |
| 6) | Tie Tod End work | - | 9500/- |
| 7) | Centre joint bed work | - | 3000/- |
| 8) | Self motor service | - | 7500/- |
| 9) | Gear Cable 2 Nos. | - | 7500/- |
| 10) | Dynamo service | - | 6500/- |
| | GST 18% | - | 17370/- |
| | TOTAL :- | | 113870/- |

மேற்கண்ட செலவினப் பட்டியலின்படி வாகனத்தின் பழுதுகளை சரி செய்யவும், நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மேற்படி வாகனம் எண். TN 28 AS 0110 வாகனத்தின் அங்கீகாரம் செய்யப்பட்ட விநியோகஸ்தர் & சர்வீஸ் சென்டர் Krystal Motors Private Limited நிறுவனத்தில் பழுதுகளை சரிசெய்யவும், நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் ரூ. **113870/–** மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(805/22/எச்1)

**தீர்மானம் எண். 35**

அனுமதிக்கப்பட்டது

(2) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதார மலேரியா பிரிவில் வளர்ச்சியடைந்த கொசுக்களை அழிக்க தேவையான புகை மருந்து இயந்திரம் (fogging machine) 2 வாங்க ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | **Fogging machine** 1–இன் விலை (ரூ.) | **Fogging machine** 2–இன் விலை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் | 74368/- | 148736/- |

| | | | |
|---|---|---|---|
| 2 | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், நாமக்கல் | 74860/- | 149720/- |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு கூட்டப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று 2 Fogging Machine வாங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(4247/21/எச்1)

**தீர்மானம் எண். 36**

அனுமதிக்கப்பட்டது

(3) தமிழக நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 2022 பணிக்காக இந்நகராட்சிப் பகுதிகளிலுள்ள வாக்குச்சாவடி மையங்கள், வாக்கு எண்ணும் மையம் மற்றும் வாக்குப்பதிவு நாளன்று தேவையான பணிகள், இவ்வலுவலக ஆணை ந.க.எண், 4021/2021/அ5 நாள் 04.02.2022–இன்படி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண். 15–இன்கீழ் கீழ்க்கண்டுள்ள மேற்க்கொள்ளப்பட்டன.

வாக்குச்சாவடி மையங்களில் சாய்தளம், மின் பணிகள், தண்ணீர் வசதி, வாக்குச்சாவடி அடிப்படை வசதிகள், மேசை, நாற்காலி பந்தல்கள் மற்றும் விளக்குகள் அமைத்தல், வாக்குச்சாவடி எண் எல்லை வரையறை கோடுகள் வரைதல், வாக்கு எண்ணும் மையத்தில் எண்ணிடுதல், பணிகள் முடித்து பெயிண்டிங் செய்தல் மற்றும் வாக்கு எண்ணிக்கை மைய பாதுகாப்பு ஏற்பாடுகள், தடுப்புகள் அமைத்து கம்பி வலை பொருத்துதல், ஒளிரும் மின் விளக்குகள், நிழற்பந்தல் மற்றும் நகர்மன்றத் தலைவர் / துணைத்தலைவர் பாதுகாப்பு தடுப்புகள் ஏற்படுத்துதல் – ரூ. 1348544/–

மேற்காணும் செலவினங்கள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

(756/22/இ1)

**தீர்மானம் எண். 37**

பதிவு செய்யப்பட்டது

(4) சொத்துவரி மற்றும் காலி மனைவரி ஆகியவற்றினை 01.04.2022 முதல் வரி உயர்வு செய்து வரப்பெற்ற நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசாணை 52, நாள் 30.03.2022 அரசாணையினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(1420/22/அ1)

**தீர்மானம் எண். 38**

பதிவு செய்யப்பட்டது

(5) தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ஆம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை (நிலை) எண். 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19.07.2018 மற்றும் அரசாணை (நிலை) எண். 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை (நிலை) எண். 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19.11.2019–இன்படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15–ஆவது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண். 52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண். 40032/2012/ஆர்1, நாள் 01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>சொத்துவரி :</u>

குடியிருப்பு கட்டடங்கள் (**Residential Building**) :

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |

| | |
|---|---|
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (**Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்டப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் இராசிபுரம் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி(**Current Liabilities)** (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 0.01 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விவரம் | 12.19 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விவரம்<br>( டுபிட்கோ, டுபிசெல், பிற) | 2.51 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 6.20 |
| | **மொத்தம்** | **20.91** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படைத் தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண். 40032/2012/ஆர்1, நாள் 01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், இராசிபுரம் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

| | | | புதியதாக நிர்ணயம் செய்யப்படும் மண்டல மதிப்பு | | |
|---|---|---|---|---|---|
| வ. எண். | தற்போதைய மண்டலம் | மண்டல மதிப்பு | பரப்பளவு சதுரடி | உயர்வு செய்வதற்கான காரணி | புதிய மண்டல மதிப்பு (ரூ.) ஒரு சதுரடிக்கு |
| | | | குடியிருப்பு | | |
| 1 | A | 1.10 | 0 முதல் 600 ச.அடி வரை | 1.25 | 2.00 |
| | | | 601 முதல் 1200 ச.அடி வரை | 1.50 | 2.25 |
| | | | 1201 முதல் 1800 ச.அடி வரை | 1.75 | 2.50 |
| | | | 1801–க்கும் மேல் | 2.00 | 2.75 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | <u>குடியிருப்பு இல்லாதவை</u> | | |
| | | | தொழிற்சாலை பயன்பாட்டுக் கட்டடங்கள் | 1.75 | 3.50 |
| | | | வணிக பயன்பாட்டுக் கட்டடங்கள் | 2.00 | 4.00 |
| | | | சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 | 3.50 |
| | | | <u>குடியிருப்பு</u> | | |
| 2 | B | 0.80 | 0 முதல் 600 ச.அடி வரை | 1.25 | 1.50 |
| | | | 601 முதல் 1200 ச.அடி வரை | 1.50 | 1.75 |
| | | | 1201 முதல் 1800 ச.அடி வரை | 1.75 | 2.00 |
| | | | 1801–க்கும் மேல் | 2.00 | 2.25 |
| | | | <u>குடியிருப்பு இல்லாதவை</u> | | |
| | | | தொழிற்சாலை பயன்பாட்டுக் கட்டடங்கள் | 1.75 | 3.00 |
| | | | வணிக பயன்பாட்டுக் கட்டடங்கள் | 2.00 | 3.50 |
| | | | சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 | 3.00 |
| | | | <u>குடியிருப்பு</u> | | |
| 3 | C | 0.60 | 0 முதல் 600 ச.அடி வரை | 1.25 | 1.25 |
| | | | 601 முதல் 1200 ச.அடி வரை | 1.50 | 1.50 |
| | | | 1201 முதல் 1800 ச.அடி வரை | 1.75 | 2.00 |
| | | | 1801–க்கும் மேல் | 2.00 | 2.25 |
| | | | <u>குடியிருப்பு இல்லாதவை</u> | | |
| | | | தொழிற்சாலை பயன்பாட்டுக் கட்டடங்கள் | 1.75 | 2.50 |
| | | | வணிக பயன்பாட்டுக் கட்டடங்கள் | 2.00 | 3.00 |
| | | | சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 | 2.50 |

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

அலுவலகக் குறிப்பு :

இராசிபுரம் நகராட்சிப் பகுதி பொது மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், நகராட்சியின் நிதிநிலையினை உயர்த்தவும், அரசாணை (நிலை) எண். 52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 40032/2012/ஆர்1 நாள் 01.04.2022–இல் தெரிவித்துள்ளவாறு 01.04.2022 முதல் சொத்துவரி மற்றும் காலிமனை வரி பொது சீராய்வு செய்து வரி உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(1420/22/அ1)

**தீர்மானம் எண். 39**

மேற்கண்ட திருத்தங்களுடன் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய வரியினங்கள் அனைத்தும் உடனடியாக செலுத்தும்படி இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரத்திற்கு ஐந்து ஆட்டோக்கள் மூலம் ஒலிபெருக்கியுடன் பயன்படுத்தப்பட்டது. மேற்படி விளம்பரத்திற்கு பயன்படுத்தப்பட்ட ஆட்டோ ஒன்றிற்கு ஒரு நாள் வாடகை ரூ. 2700/– ஆகும். மேற்படி விளம்பரம் 21.03.2022 முதல் 31.03.2022 வரை 11 தினங்களுக்கு செய்த வகையில் 5x11x2700 = 148500/- திரு ஆர். வெங்கடேசன், ராஜேஸ்வரி ஒலிபெருக்கி நிலையம், இராசிபுரம் அவர்களுக்கு தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

அ) 1 முதல் 27 வார்டுகளுக்கும் வரி செலுத்த ஒலிபெருக்கியின் மூலம் விளம்பரம் செய்ய திரு ஆர். வெங்கடேசன் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

(1310/22/அ1)

**தீர்மானம் எண். 40**

அனுமதிக்கப்பட்டது.

ஒம்/– இரா. முனைவர் கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி.